



தமிழ்நாடு அரசு

# வேளாண்மைப் பொறியியல் துறை

## வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம்

தமிழ்நாட்டில், வேளாண் பணியாளர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யவும், வேளாண் இயந்திர சக்தியின் அளவை அதிகரிக்கவும், வேளாண் பணிகளை குறைந்த செலவில் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், நவீன மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பிரபலப்படுத்தவும் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், தனிப்பட்ட விவசாயிகளுக்கும், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைப்போருக்கும் மானியத்தில் வழங்கப்படுகிறது.

**பல்வேறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு அரசால் வழங்கப்படும் அதிகபட்ச மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்படுள்ளது.**

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 1 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (8 முதல் 20 PTO குதிரைத்திறன் வரை) | 2.00 | 50% | 1.60 | 40% |
| 2 | டிராக்டர் 4 வீல் டிரைவ் (8 முதல் 20 PTO குதிரைத்திறன் வரை) | 2.25 | 50% | 1.80 | 40% |
| 3 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (20 முதல் 40 PTO குதிரைத்திறன் வரை) | 2.50 | 50% | 2.00 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 4 | டிராக்டர் 4 வீல் டிரைவ் (20 முதல் 40 PTO குதிரைத்திறன் வரை) | 3.00 | 50% | 2.40 | 40% |
| 5 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (40 முதல் 70 PTO குதிரைத்திறன் வரை) | 4.25 | 50% | 3.40 | 40% |
| 6 | டிராக்டர் 4 வீல் டிரைவ் (40 முதல் 70 PTO குதிரைத்திறன் வரை) | 5.00 | 50% | 4.00 | 40% |
| 7 | பவர் டில்லர் (8 குதிரைத்திறன் மற்றும் அதற்கு மேல்) (4 வரிசை) | 0.85 | 50% | 0.70 | 40% |
| 8 | தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் | 1.50 | 50% | 1.20 | 40% |
| 9 | தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (4 வரிசைக்கு மேல் 8 வரிசை வரை) | 5.00 | 50% | 4.00 | 40% |
| 10 | குழி தோண்டும் கருவி (தானியங்கி) | 0.75 | 50% | 0.60 | 40% |
| 11 | விசை களையெடுக்கும் கருவி (2 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜினால் இயங்கக் கூடியது) | 0.25 | 50% | 0.20 | 40% |
| 12 | புதர் அகற்றும் கருவி (3 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜின்/ மின் மோட்டாரினால் இயங்கக் கூடியது) | 0.30 | 50% | 0.25 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 13 | தட்டை வெட்டும் கருவி (3 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜின்/ மின் மோட்டார் மற்றும் 20 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள பவர் டில்லர் மற்றும் டிராக்டரினால் இயங்கக் கூடியது) | 0.20 | 50% | 0.16 | 40% |
| 14 | விசை களையெடுக்கும் கருவி (2 குதிரைத்திறனுக்கு மேல் உள்ள என்ஜினால் இயங்கக் கூடியது) | 0.35 | 50% | 0.30 | 40% |
| 15 | டிரெய்லர்/ டிராலி (3 டன் வரை கொள்ளளவுள்ள) | 0.60 | 50% | 0.50 | 40% |
| 16 | டிரெய்லர்/ டிராலி (5 டன் வரை கொள்ளளவுள்ள) | 0.75 | 50% | 0.60 | 40% |
| 17 | தட்டை வெட்டும் கருவி (3 குதிரைத்திறனுக்கு மேல் 5 குதிரைத்திறன் வரை உள்ள என்ஜின்/ மின்மோட்டார், பவர்டில்லர் மற்றும் 35 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள டிராக்டரினால் இயங்கக் கூடியது) (Chaff Cutter) | 0.28 | 50% | 0.22 | 40% |
| 18 | வார்ப்பு இறகு கலப்பை (Mould Board Plough) | 0.50 | 50% | 0.40 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 19 | சட்டிக் கலப்பை | 0.50 | 50% | 0.40 | 40% |
| 20 | கொத்துக் கலப்பை | 0.50 | 50% | 0.40 | 40% |
| 21 | சட்டிப் பலுகு (Disc Harrow) | 0.50 | 50% | 0.40 | 40% |
| 22 | திருப்பும் வசதி கொண்ட வார்ப்பு இறகுக் கலப்பை – 2 இறகு (Mechanical Reversible Plough) | 0.40 | 50% | 0.32 | 40% |
| 23 | திருப்பும் வசதி கொண்ட வார்ப்பு இறகுக் கலப்பை – 3 இறகு (Mechanical Reversible Plough) | 0.50 | 50% | 0.40 | 40% |
| 24 | லேசர் நிலம் சமம் செய்யும் கருவி | 2.00 | 50% | 1.60 | 40% |
| 25 | சுழல் கலப்பை – 5 அடி (Rotavator) | 0.42 | 50% | 0.34 | 40% |
| 26 | சுழல் கலப்பை – 6 அடி (Rotavator) | 0.448 | 50% | 0.358 | 40% |
| 27 | திருப்பும் வசதி கொண்ட ஹைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை – 2 இறகு (Reversible Hydraulic Mould Board Plough) | 0.70 | 50% | 0.56 | 40% |
| 28 | திருப்பும் வசதி கொண்ட ஹைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை – 3 இறகு (Reversible Hydraulic Mould Board Plough) | 0.895 | 50% | 0.716 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 29 | வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவி (Ridge Moulder/ Bund Former – PTO operated) | 1.50 | 50% | 1.20 | 40% |
| 30 | விதையுடன் உரமிடும் கருவி / உழவின்றி விதையுடன் உரமிடும் கருவி (9 கொத்து) | 0.213 | 50% | 0.17 | 40% |
| 31 | விதையுடன் உரமிடும் கருவி / உழவின்றி விதையுடன் உரமிடும் கருவி (11 கொத்து) | 0.241 | 50% | 0.193 | 40% |
| 32 | டிராக்டரால் இயங்கக் கூடிய கதிரறுக்கும் கருவி | 0.75 | 50% | 0.60 | 40% |
| 33 | குழி தோண்டும் கருவி | 0.75 | 50% | 0.60 | 40% |
| 34 | நிலக்கடலை தோண்டும் கருவி | 0.75 | 50% | 0.60 | 40% |
| 35 | கதிரடிப்பான் / பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் (மணிக்கு 4 டன் வரை கதிரடிக்கும் திறன்) | 1.00 | 50% | 0.80 | 40% |
| 36 | இன்ஃபீல்டர் | 0.63 | 50% | 0.50 | 40% |
| 37 | அறுவடை இயந்திரம் (தானியங்கி – 14 அடி வரையிலான கட்டர் பார்) | 8.00 | 50% | 6.40 | 40% |
| 38 | அறுவடை இயந்திரம் (தானியங்கி – 6 முதல் 8 அடி வரையிலான கட்டர் பார்) | 11.00 | 50% | 8.80 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| **35 குதிரைத்திறனுக்கு மேல் உள்ள டிராக்டரால் இயங்கக் கூடிய கருவிகள்** | | | | | |
| 39 | அறுவடை இயந்திரம் (ட்ராக் – 6 அடிக்கு கீழ் உள்ள கட்டர் பார்) | 7.00 | 50% | 5.60 | 40% |
| 40 | கதிரடிப்பான் / பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் (மணிக்கு 4 டன்னுக்கு மேல் கதிரடிக்கும் திறன்) | 2.50 | 50% | 2.00 | 40% |
| 41 | கரும்பு சோகை துகளாக்கும் கருவி | 1.25 | 50% | 1.00 | 40% |
| 42 | தென்னை ஓலை துகளாக்கும் கருவி | 0.63 | 50% | 0.50 | 40% |
| 43 | வைக்கோல் கூட்டும் கருவி (Hay Rake) | 1.50 | 50% | 120 | 40% |
| 44 | வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (உருளை வடிவம் – கட்டுக்கு 14 முதல் 16 கிலோ வரை) | 2.00 | 50% | 1.60 | 40% |
| 45 | வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (உருளை வடிவம் – கட்டுக்கு 16 முதல் 25 கிலோ வரை) | 5.50 | 50% | 4.40 | 40% |
| 46 | வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (செவ்வக வடிவம் – கட்டுக்கு 18 முதல் 20 கிலோ வரை) | 6.00 | 50% | 4.80 | 40% |

| வ. எண் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானிய தொகை (ரூ.இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 47 | கரும்பு கட்டை சீவும் கருவி (Sugarcane Ratoon Manager) | 1.25 | 50% | 1.00 | 40% |

**வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்**

கிராமப்புற தொழில் முனைவோர், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் போன்றோர் வட்டார அளவில், வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களை ரூ.25 இலட்சம் மதிப்பில் அமைத்திட ஏதுவாக 40 சதவீதம் மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

**வேளாண் இயந்திர சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் கிராம அளவிலான வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் மையங்களை நிறுவுதல்**

பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் போன்ற அமைப்புகள் மூலம் ஒவ்வொன்றும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் இயந்திர மையங்களை கிராம அளவில் நிறுவிட அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் அளவிற்கு, குறைந்தபட்சம் 8 உறுப்பினர்களைக் கொண்ட விவசாய குழுக்களுக்கு வேளாண் இயந்திர மையங்களின் திட்ட மதிப்பீட்டில் 80 சதவீதம் மானியம் வழங்கப்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் முதலமைச்சரின் மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையம் நிறுவுதல்**

கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையம், தொழில்முனைவோர் மூலம் சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து ஒவ்வொன்றும் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில், 40 சதவீதம்

(அதிகபட்சமாக ரூ.60  இலட்சம் வரை) மானிய உதவியுடன் நிறுவப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.

- வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் ஆதி  திராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

- கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் உள்ள கிராம விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி அறிந்துகொள்ள மற்றும் விண்ணப்பிக்க கீழ்க்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் (வே.பொ).<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண். 487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை – 600  035.<br>தொலைபேசி எண்: 044-29510822<br>இமெயில்– aedcewrm@gmail.com, | சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே. பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே. பொ) |